# <u>கீழக்கரை நகர் மன்ற 28.12.2018–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்</u>

## <u>பொருள் : 1</u>

இந்நகராட்சியின் 2017–2018–ம் ஆண்டுக்குரிய இயல்நிலை கணக்குகள் வரவு செலவீனஙகள் (Receipt & Expenditure ) ஐந்தொகை கணக்குகள் (Trail Balance ), இருப்பு நிலை விபரம் (Balance Sheet ) ஆகியவைகள் பழைய நான்கு இலக்க இயல்பு நிலை கணக்கு முறையிலும் (ABAS–FAS) புதிய ஏழு இலக்க முறையிலும் (CWBS) தயார் செய்து தணிக்கைக்கு அளிக்கும் பொருட்டு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ABA System கண்சலண்ட் திரு.வி.சீனிவாசன் எம்.காம்.சி.ஏ கோவில்பட்டி என்பவருக்கு கட்டணம் ரூ. 35,000/– மட்டும் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.
**(கோப்பு எண்.இ1 / 355 /2018)**

**அலுவலக குறிப்பு**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ 35,000/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்

## <u>தீர்மானம் எண். 482 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :2</u>

இந்நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் தண்ணீர் பயன்பாட்டிற்கு பொருந்தப்பட்டுள்ள 0.5HP மின்மோட்டாரில் காயில் பழுதாகி மின்மோட்டாரை இயக்க முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி மின்மோட்டாரில் காயில் பழுது நீக்கம் செய்து தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

மேற்காணும் அம்மா உணவகத்தில் தண்ணீர் பயன்பாட்டிற்குரிய 0.5HP மின்மோட்டார் காயில் பழுது நீக்கம் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.3780/– ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.1252/2018/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.3,780/–ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு அம்மா உணவகத்தில் தண்ணீர் பயன்பாட்டிற்குரிய மின்மோட்டார் காயில் பழுது எஸ்.எம்.ராஜா ரீவைண்டிங, கீழக்கரை நிறுவனம் மூலம் பழுது நீக்கம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண். 483 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :3</u>

இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.6 மலேரியா கிளினிக் வளாகத்தில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தில் பொருத்தப்பட்டுள்ள 1HP ஆழ்குழாய் கிணறு(Borwell) உள்ள மின்மோட்டார் மணலில் இறஙகி இயஙகாத நிலையில் உள்ளதால் மின்மோட்டார் ஆய்வு செய்தபோது மின்மோட்டார் காயில் பழுது ஏற்பட்டு மின்மோட்டாரை இயக்க முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி சமுதாய கழிப்பிடத்தை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அவற்றை பழுது நீக்கம் செய்து தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

மேற்காணும் மின்மோட்டர் ஏற்பட்ட பழுதுகளை தண்ணீர் பயன்பாடு அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,000/—ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(கோப்பு எண்.1251/2018/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து ரூ.8,000/—ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண். 484 அனுமதிக்கப்பட்டது</u>

## <u>பொருள் :4</u>

அரசு ஆணை எண். (MS) : 111, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு [ME3(2] துறை, நாள்:13.08.2007ல் தெரிவித்துள்ளவாறு, கீழக்கரை நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து, வயது முதிர்வில் 30.04.2015—ல் ஓய்வு பெற்ற, திருமதி.வி.சூரியம்மாள் அவர்களின் மாதந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா 148 தவணைகள் மற்றும் அதற்கான அனுமதிக்கப்பட்ட வட்டி தொகைகள், கணக்கீட்டு வழஙகவும், நகராட்சி பஙகு தொகை ரூ 10,000/— வீதம் நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கும் அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகின்றது.

(கோப்பு.எண்:16 /2015/சி1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக, 30.04.2015—ந்தேதி ஓய்வு பெற்றுள்ள, திருமதி.வி.சூரியம்மாள் என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா, வட்டி மற்றும் நகராட்சி பஙகு தொகைகள் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண். 485அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :5</u>

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் துவக்கக்கட்டப் பணிகளான வார்டு எல்லை மறுவரையறை பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணிகளுக்கு ஆட்டோ காட் (AutoCAD) மற்றும் வரைபடம் (Drawing) சம்பந்தமான பணிகள் செய்ய வேண்டியுள்ளது. மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளை நேரடி ஆய்வு செய்து இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகள் தொடர்பாக நடைபெறும் ஆய்வுக் கூட்டஙகளுக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை நகராட்சி மண்டல இயக்குநர் அலுவலகஙகளுக்கு செல்லும் பொழுது மடிக்கணினி 1—எண்ணம் (Laptop) உடன் வருமாறு தெரிவிக்கப்படுகிறது. ஆகையால் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மடிக்கணினி மற்றும் ஆய்வுக்கூட்ட புள்ளிவிபரஙகள், வரைபடஙகள் மற்றும் புகைப்படஙகள் கலர் மற்றும் கருப்பு வெள்ளை பிரிண்ட்அவுட் (Color & Black and White Printout) எடுக்கும் வகையில் மொபைல் பிரிண்டர் 1—எண்ணம் அலுவலக பொதுசாதாரப் பிரிவு பணிகளுக்கு தேவையான பிரிண்டர் 1—எண்ணம் மற்றும் மடிக்கணினி உபயோக உதிரிப்பொருட்கள் வாஙகித் தருமாறும் இவ்வலுவலக பொதுப்பிரிவு உள்ளாட்சி தேர்தல் மற்றும் பொதுசுகாதாரப் பிரிவு இளநிலை உதவியாளரால் கோரப்பட்டுள்ளது. மேற்காணும் மடிக்கணினி மற்றும் பிரிண்டர்கள் அலுவலகப் பயன்பாட்டிற்கு வாஙகி வழஙகிடுமாறு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளின் அவசியம் மற்றும் நிர்வாக நலனை கருத்தில் கொண்டு

மத்திய அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்திற்கு உட்பட்டு (DGS& D Rate) உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று வாஙகும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு மத்திய அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்திற்கு உட்பட்டு (DGS& D Rate) உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மடிக்கணினி மற்றும் பிரிண்டர்கள் வாஙகுவதற்குரிய செலவினஙகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண். 486அனுமதிக்கப்பட்டது.

## பொருள் :7

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் துப்புரவு பணிகளின் போது பயன்படுத்தப்படும் கிருமி நாசினி பொருட்களான **சுண்ணாம்புத்தூள், பிளிச்சிஙபவுடர், ஈமருந்து (நூவான்) மற்றும் பினாயில்** போன்ற பொருட்கள் வாஙகி வழஙகிட இவ்வலுவலக துப்புரவுபணி மேற்பார்வையாளர்களால் தேவைப்பட்டியல் வழஙகப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகர் பொதுசுகாதார நலனை கருதியும் துப்புரவு பணியின் அவசியம் கருதியும் பஸ்நிலையம், மீன்மார்க்கெட், தினசரிமார்க்கெட், குப்பைகள் அகற்றும் குப்பை பெட்டி உள்ள பகுதிகளிலும், சமுதாய / பொதுகழிப்பிடஙகள் மற்றும் கழிவுநீரேற்றும் பகுதிகளில் மேற்கண்ட கிருமி நாசினி பொருட்கள் பயன்படுத்துவதற்கு அரசு அஙகீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனஙகளில் வாஙகி தருமாறு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு அதற்கான உத்தேச செலவீனம் ரூ 4,25,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண் எச்1/1189/2018)**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | — | 10 | டன் |
| 2. | பிளிச்சிங பவுடர் | — | 5 | டன் |
| 3. | பினாயில் | — | 500 | லிட்டர் |
| 4. | ஈ மருந்து நூவான் | — | 50 | லிட்டர் |

**அலுவலகக் குறிப்பு:**

1. உத்தேச செலவீனம் ரூ 4,25,000/— ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுசுகாதார நலன் கருதி கிரிமிநாசினி பொருட்கள் அரசு அஙகீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனஙகள் மூலம் வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண். 488அனுமதிக்கப்பட்டது.

## பொருள் :8

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.21 தட்டான் தோப்பு மற்றும் வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை மற்றும் வார்டு எண்.16 புதுக்குடி ஆகிய இடங்களில் கழிவு நீரேற்றும் நிலையம் அமைந்துள்ளது. மேற்படி கழிவு நீர்ரேற்று நிலைத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் மோட்டர்களை இயக்குவதற்கும் கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் தேற்றுவிக்கப்படாத காரணத்தால் பொது சுகாதார நலன் கருதி ஒரு கழிவு நீரேற்று நிலைத்திற்கு இரவு மற்றும் பகல் நேரஙகளுக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலைத்திற்கு 6 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் (Outsouring) பணி செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.269 நாள்.30.11.2017 ன்படி ரூ.11,00,000/—க்கு அனுமதி பெற்று 12.01.2018—ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் மதிப்பீட்டுத் தொகைக்கு 0.06%

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி–2 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்ற தீர்மான எண்.308, நாள்.29.01.2018–ன்படி 6 நபர்களைக் கொண்டு ஓராண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்வதற்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1300–2/2017/இ1, நாள். 30.01.2018–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்குரிய பணி உத்திரவு 31.01.2019ம் தேதியுடன் முடிவடைவதால் 02/2019 மாதம் முதல் தொடர்ந்து கழிவு நீர்ரேற்று நிலைத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் மோட்டர்களை இயக்கும் பணி (Out Sourcing) செய்ய 2017-18-ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே 6 ஒப்பந்த பணியாளர்களை வழங்குவதற்கு சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி–2 நிறுவனத்தின் மூலம் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிர்வாக காரணங்களால் மேற்காணும் பணிக்கு 2018–2019ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி–2 நிறுவனம் நல்லமுறையில் மேற்காணும் பணியினை நல்லமுறையில் செய்து கொண்டிருப்பதால் அடுத்த ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு முடிவு செய்யும் வரை 02/2018 மாதம் முதல் கழிவு நீர்ரேற்று நிலைத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் மோட்டர்களை இயக்கும் பணி (Out Sourcing) செய்ய 6 ஒப்பந்த பணியாளர்கள் மட்டும் 2017–2018ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே ஒப்பந்த ஊதியம் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி–2 நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு வழங்கிடும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.11,00,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1300–2/2017/இ1)**

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. கழிவு நீர்ரேற்று நிலைத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் மோட்டர்களை இயக்கும் பணி (Out Sourcing) செய்ய 2017-2018-ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே 6 ஒப்பந்த பணியாளர்கள் வழங்குவதற்கு சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி–2 நிறுவனம் சம்மதம் தெரிவித்ததின்படி 02/2019ம் மாதம் முதல் தொடர்ந்து பணிகள் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.11,00,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. கழிவு நீரேற்றும் நிலைய மின்மோட்டார்கள்/ஆயில் மோட்டார்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் (Out sourcing) செய்ய 2019–2020–ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு ஒப்பந்த புள்ளிகள் முடிவு செய்யும் வரை 2017-2018-ம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே 6 ஒப்பந்த பணியாளர்கள் சிதம்பரனார் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட். தூத்துக்குடி–2 மூலம் தொடர்ந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண். 489 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :9</u>

மண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கையின் படி சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் ஒருமுறை பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல் தேக்கி வைத்தல் அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்துதல் விற்பனை செய்தல் போன்றவை 01.01.2019 முதல் தடை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனை நடைமுறை படுத்தும் விதமாக மாண்புமிகு தமிழக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களால் திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 22.12.2018–ந் தேதி ஆய்வுக்கூட்டம் நடைபெற உள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண் ஊ.நி2/3410/2018 நாள் 17.12.2018 மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்

அவர்களின் 18.12.2018–ந் தேதிய கடிதங்களில் தெரிவித்துள்ளதற்கிணங்க மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ளப்பட்டது.

மேற்படி 22.12.2018– தேதிய ஆய்வுக்கூட்டத்தில் ஒருமுறை பயன்படுத்தி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளதால் தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படி இந்நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு பிளாஸ்டிக் தடைசெய்தல் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட விழிப்புணர்வு விளம்பரங்கள் செய்வதற்கு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது.

| வ.எண் | விழிப்புணர்வு செய்ய வேண்டிய விபரஙகள் |
|---|---|
| 1 | பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு நேட்டீஸ் (மல்டி கலர் பிரிண்டிங) |
| 2 | தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் சம்பந்தமான நோட்டீஸ் |
| 3 | பிளாஸ்டிக் ஆட்டோ விளம்பரம் |
| 4 | பிளாஸ்டிக் பொருட்கள் கண்காட்சி |
| 5 | பிளாஸ்டிக் சம்பந்தமான பிளக்ஸ்போர்டு |

மேற்கண்ட பிளாஸ்டிக் விழிப்புணர்வு விளம்பரஙகளுக்கான உத்தேச செலவீனம் ரூ 2,35,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. பிளாஸ்டிக் தடைசெய்தல் தொடர்பான விழிப்புணர்வு விளம்பரங்கள் செய்வதற்கான உத்தேச ரூ 2,35,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகர் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு விளம்பர ஸ்டிக்கர்கள் அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாஙகிட உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3. இந்நகர் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு விளம்பரம் ஆட்டோ மூலம், கண்காட்சி, பிளக்ஸ்போர்டு போன்றவைகள் மூலமாக விளம்பரம் செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண். 490 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :10</u>

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு டிப்பர் லாரி வாகனம் **TN65 F 5067**–ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் 1. வண்டி முன்பக்க டோர் வேலை, 2. வண்டி பின்பக்க பாடி வேலை 3. கிளெச் வேலை 4. பிரேக் 5. ஹைட்ராலிக் வேலை 6. பெயின்டிங 7. ஆக்ஸிலேட்டர் வேலை 8. செல்ப்மோட்டார் வேலைகள் 9. புதிய பேட்டரி 10. கியர்பாக்ஸ் வேலை மற்றும் இதர பழுதுகள் சரிசெய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ 2.86–லட்சத்திற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 475 நாள் 30.11.2018–ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 11.12.2018–ம் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>பேராவூர்,<br>தேவிப்பட்டிணம் ரோடு,<br>இராமநாதபுரம் | ரூ.2,85,856/–<br><br>(CGST & SGST உட்பட) |
| 2 | ஏ.ஆர். என்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>B1 காவல் நிலையம் அருகில்<br>G.H. ரோடு,<br>இராமநாதபுரம் | ரூ.2,92,581/–<br><br>(CGST & SGST உட்பட) |
| 3 | ஸ்ரீ விக்ணேஷ் என்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>தேவிப்பட்டிணம் ரோடு,<br>இராமநாதபுரம் | ரூ.3,06,007/–<br><br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண்.1201/2018/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் **TN65 F 5067** டிப்பர் லாரியில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தருவதற்கு மேற்கண்ட விலைப்புள்ளிகளில் பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட ரூ 2,85,356/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், பேராவூர், இராமநாதபுரம் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண். 491அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :11</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7616/2018/பி3 நாள்.06.06.2018–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 20.06.2018–ந் தேதி நடைபெற்ற 7வது மாநில உயர் ஆற்றல் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணஙக, **Swatch Bharat mission- திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்யும் பொருட்டு** இந்நகராட்சிக்குட்பட்ட புதிய மற்றும் பழைய உரக்கிடஙகில் உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றும் பணிகள், வார்டு எண்.2 இந்துக்கள் மயானப்பகுதி மற்றும் வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு பகுதிகளில் நுண் உரம் செயலாக்க மையஙகள் அமைக்கும் பணிகள், இந்நகர் பகுதியில் வீடு வீடாகச் சென்று குப்பைகளை பிரித்து எடுக்கும் சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனம் 14–எண்ணம் வாஙகுதல் மற்றும் டிப்பர் ஆட்டோ 4–எண்ணம் வாஙகுதல் ஆகிய பணிகள் ரூ.244 லட்சத்திற்கு தேர்வு செய்து இந்நகர்மன்ற தீர்மான எண்.393 நாள்.26.06.2018–ன்படி, நிர்வாக அனுமதி வழஙககோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்ளுக்கு 26.06.2018–ந் தேதி விரிவான திட்ட கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

2018–19 ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம்– திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதற்கு 13.08.2018–ந் தேதி நடைபெற்ற **7–வது மாநில உயர் ஆற்றல் குழு** கூட்டத்தில் இந்நகராட்சிக்கு வார்டு எண்.2 இந்துக்கள் மயானப்பகுதி மற்றும் வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு பகுதிகளில் நுண் உரம் செயலாக்க மையஙகள் அமைக்கும் பணிகள், இந்நகர் பகுதியில் வீடு வீடாகச் சென்று குப்பைகளை பிரித்து எடுக்கும் சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனம் 9–எண்ணம் வாஙகுதல் மற்றும் டிப்பர் ஆட்டோ 4–எண்ணம் வாஙகுதல் ஆகிய பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம் **சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22566/2018/பி3 நாள்.20.08.2018–தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.22866/2018/பி3 நாள்.23.08.2018**–ன்படி ரூ.158.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி,சிப்பம்–1–ல் கண்டுள்ள நுண் உரம் செயலாக்கும் மையம் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு 13.11.2018ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து

16.11.2018–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 27.11.2018–ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**[கோப்பு எண்.635/2018/இ1]**

**Package –I மதிப்பீடு ரூ.60.00 லட்சம்**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு ரூ. லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | **சிப்பம்–1 (Package-I)**<br>வார்டு எண்.2 இந்துக்கள் மயானம் பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைக்கும் பணி.(Construction of Micro Composted Centre) | 60.00 | திரு.எஸ்.முனியசாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>எண்1/4,மாரியம்மன் கோவில் தெரு,இராமநாதபுரம் | ரூ.60,00,617/– மதிப்பீட்டு தொகையைவிட 4.84% கூடுதல் |
| | | | திரு.மு.கார்த்திகேயன்,<br>ஒப்பந்ததாரர்,<br>எண்1/5,மாரியம்மன் கோவில் தெரு,இராமநாதபுரம் | ரூ 60,44,978/– மதிப்பீட்டு தொகையைவிட 5.62% கூடுதல் |

**அலுவலகக் குறிப்பு.**

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி ஒப்பந்தகாரர்கள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலான விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், மூலப்பொருட்களின் விலை மார்க்கெட்டில் கூடுதலாக உள்ளதை சுட்டிக் காட்டி விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.84 சதவீதம் கூடுதலில் குறைவாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## தீர்மானம் எண். 492அனுமதிக்கப்பட்டது.

## பொருள் :12

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7616/2018/பி3 நாள்.06.06.2018–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையகரத்தில் 20.06.2018–ந் தேதி நடைபெற்ற 7வது மாநில உயர் ஆற்றல் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, **Swatch Bharat mission- திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்யும் பொருட்டு** இந்நகராட்சிக்குட்பட்ட புதிய மற்றும் பழைய உரக்கிடஙகில் உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றும் பணிகள், வார்டு எண்.2 இந்துக்கள் மயானப்பகுதி மற்றும் வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு பகுதிகளில் நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைக்கும் பணிகள், இந்நகர் பகுதியில் வீடு வீடாகச் சென்று குப்பைகளை பிரித்து எடுக்கும் சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனம் 14–எண்ணம் வாஙகுதல் மற்றும் டிப்பர் ஆட்டோ 4–எண்ணம் வாஙகுதல் ஆகிய பணிகள் **ரூ.244** லட்சத்திற்கு தேர்வு செய்து இந்நகர்மன்ற தீர்மான எண்.393 நாள்.26.06.2018–ன்படி, நிர்வாக அனுமதி வழஙககோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்ளுக்கு 26.06.2018–ந் தேதி விரிவான திட்ட கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

2018–19 ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம்– திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதற்கு 13.08.2018–ந் தேதி நடைபெற்ற **7–வது மாநில உயர் ஆற்றல் குழு** கூட்டத்தில் இந்நகராட்சிக்கு வார்டு எண்.2 இந்துக்கள் மயானப்பகுதி மற்றும் வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு

பகுதிகளில் நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைக்கும் பணிகள், இந்நகர் பகுதியில் வீடு வீடாகச் சென்று குப்பைகளை பிரித்து எடுக்கும் சேகரிக்க மின்கலன் மூலம் இயங்கும் வாகனம் 9–எண்ணம் வாங்குதல் மற்றும் டிப்பர் ஆட்டோ 4–எண்ணம் வாங்குதல் ஆகிய பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம் **சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22566/2018/பி3 நாள்.20.08.2018–தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.22866/2018/பி3 நாள்.23.08.2018–**ன்படி ரூ.158.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி,சிப்பம்–2–ல் கண்டுள்ள நுண் உரம் செயலாக்கும் மையம் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு 13.11.2018ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 16.11.2018–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 27.11.2018–ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**[கோப்பு எண்.635/2018/இ1]**

**<u>Package –II மதிப்பீடு ரூ.60.00 லட்சம்</u>**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு ரூ. லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>சிப்பம்–2 (Package-II)</u>** வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையஙகள் அமைக்கும் பணி. (Construction of Micro Composted Centre) | 60.00 | திரு.எஸ்.முனியசாமி, ஒப்பந்ததாரர், எண்1/4, மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம் | ரூ.60,01,402/– மதிப்பீட்டு தொகையைவிட 4.86%கூடுதல் |
| | | | திரு.மு.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர், எண்1/5, மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம் | ரூ 60,63,140/– மதிப்பீட்டு தொகையைவிட 5.94% கூடுதல் |

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி ஒப்பந்தகாரர்கள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலான விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், மூலப்பொருட்களின் விலை மார்க்கெட்டில் கூடுதலாக உள்ளதை சுட்டிக் காட்டி விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.86 சதவீதம் கூடுதலில் குறைவாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## <u>தீர்மானம் எண். 493 அனுமதிக்கப்பட்டது.</u>

ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.